29.07.2026

புதுக்கோட்டை ஜெ.ஜெ.கலை அறிவியல் கல்லூரியின் (தன்னாட்சி), கணினி அறிவியல் மற்றும் தரவு அறிவியல் முதுகலை மற்றும் ஆராய்ச்சித்துறை “நிஜ உலகப் பயன்பாடுகளுக்கான பைதான் (Python)” குறித்த சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சி – அறிக்கை

புதுக்கோட்டை ஜெ.ஜெ.கலை அறிவியல் கல்லூரியின் (தன்னாட்சி) கணினி அறிவியல் மற்றும் தரவு அறிவியல் முதுகலை மற்றும் ஆராய்ச்சித் துறையின் ‘சைபர்-டெக்’ (Cybertech) சங்கம் 29 ஜீலை 2026 அன்று காலை 10.30 மணிக்குக் கல்லூரி கருத்தரங்கக் சுடத்தில் “நிஜ உலகப் பயன்பாடுகளுக்கான பைதான்” (Python for Real World Applications) என்ற தலைப்பில் ஒரு சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது. பைதான் நிரலாக்க மொழி மற்றும் நவீனத் தொழில்துறைகளில் அதன் பயன்பாடுகள் குறித்த மாணவர்களின் நடைமுறை அறிவை மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்நிகழ்ச்சி நடத்தப்பட்டது. கணின அறிவியல் மற்றும் தரவு அறிவியல் முதுகலை மற்றும் ஆராய்ச்சித் துறையின் தலைவரும் கல்லூரித் துணை முதல்வருமான முனைவர் ச.சுதா அவர்களின் தலைமையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

மூன்றாம் ஆண்டு இளநிலை கணினி அறிவியல் மாணவி பி.ஆர்த்தி வரவேற்புரை நிகழ்த்தி, சிறப்பு விருந்தினர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களை வரவேற்று நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார். மூன்றாம் ஆண்டு இளநிலை கணினி அறிவியல் மாணவி கே. சௌமியா நிகழ்ச்சியைத் திரம்படத் தொகுத்து வழங்கினார். அவர் மிகுந்த தன்னம்பிக்கையுடனும் தொழில்முறை நேர்த்தியுடனும் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் கணினி அறிவியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் அ. அசோக்குமார், இணையதள உருவாக்கம் (Web Development) தரவு அறிவியல், செயற்கை நுண்ணறிவு, தானியக்கமாக்கல் (யுரவழஅயவழைெ), இணையப் பாதுகாப்பு மற்றும் வணிகப் பகுப்பாய்வு (டீரளைநைளள யுயெடலவரைள) போன்ற துறைகளில் நிஜ உலக சிக்கல்களைத் தீர்ப்பதில் பைதான் மொழியின் முக்கியத்துவம் குறித்துச் சிறப்பானதொரு சொற்பொழிவை ஆற்றினார்.

கருத்துப்பரிமாற்ற அமர்வின் போது, பைதான் மொழியின் எளிமை, பன்முகத்தன்மை மற்றும் விரிவான “லைப்ரரி” (Library) ஆதரவு ஆகியவற்றால் அது எவ்வாறு மிகவும் விரும்பப்படும் நிரலாக்க மொழிகளில் ஒன்றாக மாறியுள்ளது என்பதை முனைவர் அசோக்குமார் செயல்விளக்கத்துடன் விளக்கினார்.

தொழில்துறையின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் வகையில் நடைமுறைத் திட்டங்களை (Projects) உருவாக்கவும், தங்கள் தொழில்நுட்பத் திறன்களைத் தொடர்ந்து மேம்படுத்திக்கொள்ளவும் அவர் மாணவர்களை ஊக்குவித்தார். நிஜ கால உதாரணங்களை உள்ளடக்கிய இச்சொற்பொழிவு, பைதான் மூலம் புதுமையான தீர்வுகளைக் கண்டறியவும், வளர்ந்து வரும் தொழில்நுட்பத் துறைகளில் தங்கள் பணிவாழ்வை அமைத்துக் கொள்ளவும் மாணவர்களுக்கு உத்வேகம் அளிப்பதாக அமைந்தது.

நிகழ்ச்சியின் நிறைவாக, மூன்றாம் ஆண்டு இளநிலை கணினி அறிவியல் மாணவி எம்.அர்ச்சனா நன்றியுரை வழங்கினார். கல்லூரி நிர்வாகம் முதல்வர் துணை முதல்வர் சிறப்பு விருந்தினர் பேராசிரியர்கள் மற்றும் பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து, இந்நிகழ்ச்சி சிறப்பான முறையில் நடைபெற ஒத்துழைப்பு நல்கியமைக்கு அவர் தனது நன்றியை தெரிவித்து இந்நிகழ்ச்சி சிறப்பான முறையில் நடைபெ ஒத்துழைப்பு நல்கியமைக்கு அவர் தனது நன்றியை வெளிப்படுத்தினார். இன்றைய தொழில்நுட்பம் சார்ந் உலகில் பைத்தானின் (Python) நடைமுறைப் பயன்பாடுகள் குறித்த மதிப்புமிக்க புரிதலை மாணவர்களுக்கு வழங்கிய இந்தச் சிறப்புச் சொற்பொழிவு மிகுந்த தகவல் செறிந்ததாகவும் பயனுள்ளதாகவும் அமைந்தது.